DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் திங்கள்கிழமை 20ம் நாள் சாட்சியாகிய பழனிசாமி என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பழனிசாமி | வயது | 63 |
| த/பெ. | வெங்கடேசன் | இனம் | ஆண் |
| கிராமம் | வேலூர் | தொழில் | பணி ஓய்வு |
| சமயம் | | தாலூக்கா | |

**C.C.60/2020**

(எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை.)

**<u>முதல் விசாரணை 20.01.2025 அ.சா.4</u>**

1. நான் வாலாஜா காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வந்து 2021 மே மாதம் பணி ஓய்வு பெற்றுவிட்டேன். நான் 2018ம் வருடம் அரக்கோணம் நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றிய போது 09.05.2018ம் தேதி மாலை 05.30 மணிக்கு பாலாஜி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.289/2018 இதச பிரிவுகள் 341, 294(பி),506(1) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் பிரிவு 4ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

2. பிறகு வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 09.05.2018ம் தேதி மாலை 06.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சிவராஜ் மற்றும் சிவசங்கர் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். (**பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

3. பிறகு 1 முதல் 4 பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். விசாரணையில் சம்பவம் உண்மை என்று தெரியவரவே 10.05.2018ம் தேதி காலை 06.30 மணிக்கு அரக்கோணம் பழைய பேருந்து நிறுத்திடம் எதிரியை கைது

செய்து எதிரி தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ஆறுமுகம், அன்பழகன் முன்னிலையில் பதிவு செய்தேன். (**ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள என்னை அழைத்து சென்றால் என் கிளினிக்கை அடையாளம் காட்டுவேன் என்ற அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4. பிறகு எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். விசாரணையில் எதிரி மீது முதல் நோக்கு தோன்றியதால் விசாரணை முடித்து நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

5.எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

மறு விசாரணை : இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.
Sd/-K.Ramkumar, M.L.,
Judicial Magistrate No.I,
Arakkonam.